பிரதம செயலாளர் செயலகம், வட மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය- උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council
கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை
කන්නියා පාර, වරෝතයනකර්, ත්‍රිකුණාමලය.
Website: www.np.gov.lk   Kanniya Road, Varothayanagar, Trincomalee.   e-mail:npcs@sltnet.lk

**My No: - NP/09/FRM/2009**

Date:- 29.01.2009

**மாகாண திறைசேரி சுற்று நிருப இல:- PT/02/2009**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு விநியோகமும்**
**ஏற்பட்ட செலவை மீளச் செலுத்தலும்**

தாபனக்கோவை அத்தியாயம் XVI பிரிவு1:1ன் பிரகாரம் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நிதியாண்டு ஒன்றினுள் மூன்றுசோடி(3) அல்லது ஆறு(6) தனியான புகையிரத ஆணைச்சீட்டுக்கள் பெறத்தகுதியுடையவர். ஆனால் பதவியேற்ற அதே வருடமாயின் நியமனத்திகதியைக் கருத்திற்கொண்டு விகிதாசார அடிப்படையிலான எண்ணிக்கையில் புகையிரத ஆணைச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

2. அமையவிடுமுறையைப் பெறத் தகுதியுடைய ஒரு அமைய உத்தியோகத்தர் ஒரு சோடி(1) அல்லது இரண்டு(2) தனியான ஆணைச்சீட்டுக்களைப் பெறத் தகுதியுடையவர்.

3. இளைப்பாறும் காலம் நெருங்கிவரும் உத்தியோகத்தர்களும் இளைப்பாறும் திகதியைக் கருத்திற்கொண்டு விகிதாசார அடிப்படையில் புகையிரத ஆணைச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

4. தற்போது வடமாகாணத்தில் புகையிரதச் சேவையின்மை காரணமாக உத்தியோகத்தர் ஒருவர் தான் பெறுவதற்கு தகுதியுடைய ஆணைச்சீட்டுகளைப் பெற்று பின்னர் அவற்றை இரத்துச் செய்து அவ் ஆணைச்சீட்டுக்களின் மொத்தப்பணப்பெறுமதி அல்லது கப்பற் பயணச்சீட்டின் பணப்பெறுமதி அல்லது விமானப்பயணச்சீட்டின் பணப்பெறுமதி ஆகியவற்றில் எத் தொகை குறைவானதோ அத்தொகையை மீளப் பெற்றுக்கொள்ளமுடியும். மீளப்பெறும் உறுதிச்சீட்டுடன் பயணச் சீட்டினையும், இரத்துச் செய்த புகையிரத ஆணைச்சீட்டுக்களையும் இணைத்தல் இன்றியமையாததாகும்.

5. இச்சுற்றுநிருபம் 01/01/2009ல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளை இவ்விடயம் தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் யாவும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

**சி.ரங்கராஜா**
**பிரதம செயலாளர்**

பிரதி :-

1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர் - மாகாண பொது நிர்வாகம் - வ.மா
3. கணக்காய்வாளர் நாயகம்.
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு – வ.மா

} தகவலுக்காக

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary: 026-3266501, Residence – 026-2226954-115
அலுவலகம் / කාර්යාලය / Office: 026-3262285
தொலை நகரி / ෆැක්ස් / Fax: 026 2226952